2015 பிப்ரவரி 20]

உள்ளது. மக்களின் நலன் காக்கின்ற மாண்புமிகு மக்களின் முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலோடு நடக்கும் இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று, வக்ஃபு வாரியத்தின் அனுமதி பெற்று, மருத்துவமனையைப் பழுது நீக்கம் செய்யவும், தரம் உயர்த்தவும் வேண்டுமாய் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையைக் கவனத்தில்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடு)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 11-35

2. தகவல் கோரல்

தே.மு.தி.க. உறுப்பினர்கள் கூட்டத் தொடர் முழுவதும் நீக்கி வைக்கப்பட்டுள்ளமை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், என்ன விஷயம்? சொல்லுங்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்த அவையில் நடைபெற்ற ஒரு நிகழ்வின் காரணமாக.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுசம்பந்தமான விவரம் ஒன்றை நான் சொல்லிவிடுகிறேன். பிறகு நீங்கள் பேசுங்கள். சட்டமன்றப் பேரவையின் கூட்டத் தொடர் என்பது பேரவை விதி 2-ன்படி, பேரவை கூட்டப்பட்ட நாளிலிருந்து மேதகு ஆளுநர் அவர்கள்

கூட்டத் தொடரை இறுதி செய்து வைப்பது (prorogation) வரையிலான காலத்தைக் குறிக்கும். நேற்றையதினம் நிறைவேற்றப்பட்ட இரண்டாவது தீர்மானத்தில், அராஜக செயலில் ஈடுபட்ட தே.மு.தி.க. உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமாருடன் யாரெல்லாம் ஈடுபட்டிருக்கிறார்கள் எனத் தெளிவாக ஒளிப்பதிவுக் காட்சிகளை உரிமைக் குழு பார்த்து, எடுக்க வேண்டிய நடவடிக்கையை பரிந்துரை செய்ய ஏதுவாக, இரண்டாவது தீர்மானத்தில் உள்ள அடுத்த கூட்டத் தொடர் முழுவதும் என்ற வார்த்தையை மாற்றித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதேயன்றி, யாருடைய வேண்டுகோளையும் ஏற்று அல்ல என்பதனை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன், சொல்லுங்கள். (குறுக்கீடு) Prorogation என்றால் என்ன என்பது பற்றி நான் கூறிவிட்டேன்.

திரு. துரைமுருகன்: Prorogation குறித்து நீங்கள் சொல்லிவிட்டீர்கள். அதில் ஒன்றும் குழப்பம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதில் உங்களுக்கு ஒன்றும் குழப்பம் இல்லையே? (குறுக்கீடு) இதுகுறித்து விதி தெளிவாக இருக்கிறது. கூட்டத் தொடர், session என்பது அரசமைப்புச் சட்டத்தின் 171-வது பிரிவின்படி, ஆளுநர் கூட்டுகின்ற பேரவையின் முதல் கூட்டத் தொடக்கத்திலிருந்து, 172-வது பிரிவின்படி, அக்கூட்டத் தொடரை இறுதி செய்து வைத்தல் அல்லது பேரவைக் காலத்தைக் கலைத்தல் வரையிலான காலத்தைக் குறிக்கும். அவ்வளவுதான். இதில்போய் என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு)

திரு. துரைமுருகன்: Prorogue பண்ணுவது என்பதைப் பொறுத்தவரை, கவர்னர் உரைக்கு summon செய்துவிட்டால், அடுத்து அதனையொட்டி பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கும். அதற்குப் பிறகுதான் prorogue பண்ணுவார்கள். நான் அதில் குறுக்கிடவே இல்லை. நேற்று நாங்கள் கேட்டுக்கொண்டதெல்லாம், சபாநாயகரான தாங்கள் நான்கு நாட்கள் சஸ்பெண்ட் செய்கிறேன், ஐந்து நாட்கள் சஸ்பெண்ட் செய்கிறேன் என்று சொல்லலாம். அந்த அளவிலே நீங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நேற்று அவை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. (குறுக்கீடு) இல்லை, அவை நேற்று தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர்

2015 பிப்ரவரி 20]   [பேரவைத் தலைவர்]

திரு. துரைமுருகன், உங்கள் கருத்தை நீங்கள் சொல்லிவிட்டீர்கள் அல்லவா? உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்று நிறைவேற்றப்பட்ட அவை தீர்மானத்தின்மீது நீங்கள் பேசுவது சரியல்ல. நேற்று அவை தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. நீங்கள் பேசும்போது, உங்கள் கருத்தைச் சொல்லுங்கள். அவையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்மீது நீங்கள் பேசாதீர்கள். (குறுக்கீடு) இன்றைக்கு முன்வரிசையில் அமர்ந்துள்ள 13 உறுப்பினர்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) நேரமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நேற்றைக்கு அவையில் நீங்களும் இருந்தீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம் நடைபெறுகின்ற காலகட்டங்களில் Zero Hour, கவன ஈர்ப்புத் தீர்மானம் போன்றவை எடுத்துக்கொள்ளப்படுவதில்லை. முதல் வரிசையில் அமர்ந்திருக்கின்ற தலைவர்கள் அனைவருக்கும் இன்றைக்குப் பேச வாய்ப்பு இருக்கின்றது. ஏதாவது கருத்து சொல்ல வேண்டுமென்றால், நீங்கள் பேசுகின்றபோது அந்தக் கருத்தைச் சொல்லலாம் என்று கேட்டுக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதும், உட்காருங்கள். நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசும்போது உங்கள் கருத்தைச் சொல்லலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) அவையினுடைய தீர்மானத்தின்மீது நீங்கள் விவாதம் செய்ய முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) அவைக் குறிப்பு வந்தவுடன் சொல்கிறேன். (குறுக்கீடு) அவைக் குறிப்பு வந்தவுடன் அதுகுறித்து சொல்கிறேன். (குறுக்கீடு) வரட்டும், வந்தவுடன் சொல்கிறேன். (குறுக்கீடு)

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** நேற்று நடைபெற்ற நிகழ்விற்கு தீர்மானம் முறையாகக் கொண்டு வரப்பட்டு, தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுவிட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்குப் பின்பு, அதில் ஒரு விவாதத்தை மீண்டும் தொடங்குவது அவ்வளவு சரியாக இருக்காது. இன்றைக்கு முன்வரிசைத் தலைவர்கள் 13 பேர் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோன்று, நீங்கள் பேசுகின்றபோது உங்கள் கருத்துகளைச் சொல்லலாம், உங்கள்

[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்] [2015 பிப்ரவரி 20

கருத்துகளை, பேசுகின்ற உங்கள் கட்சி உறுப்பினரிடம் சொல்லி, பேசச் சொல்லுங்கள். அனைவருக்கும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) அதுபோன்றே செய்துவிடுங்கள். மிக்க நன்றி. (குறுக்கீடு)

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். (குறுக்கீடுகள்) நேரம் இல்லை. நன்றியெல்லாம் ஒன்றும் தேவை இல்லை, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல் (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காருங்கள். எனக்கு நேரமில்லை. திரு. துரைமுருகன் அவர்கள், நீங்கள் மற்ற நேரத்தில் பேசுங்கள். இப்பொழுது நேரமில்லை, உட்காருங்கள்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

3. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. பி.வி. கதிரவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014-2015 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 234 முதல் 238 வரையிலான 5 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

(ஆ) பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.*

***திரு. ஆர். சின்னசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும்*